# செந்தமிழ்

தொகுதி: 92 | ஏப்ரல் 1998 | பகுதி: 4

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURAI TAMIL SANGAM *

முதன்மை ஆசிரியர் மா.தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல்<br>முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| பேரறிஞர் | செ. கந்தசாமி<br>முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | அ. தட்சிணாமூர்த்தி<br>முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர் |
| பேரறிஞர் | ம.ரா.போ. குருசாமி<br>செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர். |
| பேரறிஞர் | ச. மெய்யப்பன்<br>முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் |
| பேரறிஞர் | சி. கதிர் மகாதேவன்<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம். |
| பேராசிரியர் | கு. துரைராசு<br>முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | அ.அ. மணவாளன்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன்<br>திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி. |
| பேராசிரியர் | ந. பொன்னப்பன்<br>மதுரைக் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | திருமதி. பத்மா சீனிவாசன்<br>ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| பேரறிஞர் | ந. மாணிக்கம்<br>தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| பேரறிஞர் | எஸ்.எம். கமால்<br>21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம். |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி<br>தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை. |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன்<br>தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ: 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

முதன்மை ஆசிரியர் மா.தனுக்கோடிபாண்டியன் பி.ஏ.,பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

## பொருளடக்கம்


1. **எல்லோர்க்கும் தொல்காப்பியம்** *115*
*(மதிப்புறு பேராசிரியர், உயர் ஆய்வு மையம், மதுரைத் தமிழ்ச் சங்கம்)*

2. **சித்தவடமடம்** *119*
*பேரறிஞர் அ.மா.பரிமணம், தஞ்சாவூர்*

3. **தொல்காப்பியக் களவியல் - ஒரு சமுதாய இயற்பார்வை மறுசிந்தனை** *129*
*பேரறிஞர் பழ. முத்து வீரப்பன்*
*(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)*

4. **ஒரு வீட்டின் கதை புதினத்தில் சமூக மாற்றம்** *139*
*பேரறிஞர் ம. திருமலை*
*(மதுரை காமராசர் பல்கலைக் கழகம்)*

5. **வள்ளல் பாண்டித்துரைத் தேவர் வாழ்த்து** *144*
*பண்டித ரெ. இராமமூர்த்தி*

6. **சிந்தனைக்குச் சில குறட்பாக்கள்** *145*
*நாபா*

7. **திருவிரையாக் கவி** *149*
*பேரறிஞர் அ.மா.பரிமணம்*

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா. பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

(தொல் - சொல் - வினையியல்)

## சூத்திரம் 198

(வினைச் சொல்லின் இலக்கணம்)

**வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது**
**நினையுங் காலைக் காலமொடு தோன்றும்**

(ப.ரை.) வினை எனப்படுவது - வினைச் சொல் என்று கூறப்படுவது, வேற்றுமை - வேற்றுமை உருபுகளை, கொள்ளாது - ஏற்றுக் கொள்ளாது; நினையும் காலை - ஆராயுமிடத்து, காலமொடு தோன்றும் - காலத்தை உணர்த்தி நிற்கும்.

வினைச்சொல் வேற்றுமை உருபுகளை ஏற்க மாட்டா; காலத்தைக் காட்டும்.

(வி.ரை.) வேற்றுமை - பொருளை வேறுபடுத்தும் உருபு. நினையும் கால் - சிந்தித்தால். ஐ - சாரியை, காலம் - இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற மூன்று காலங்களுள் ஒரு காலத்தைக் காட்டும். 'நினையும் கால்' என்ற தொடர், சில வினைச் சொற்கள் வெளிப்படையாகக் காலம் காட்டாமல், குறிப்பாகக் காட்டும் என்பதை விளக்க வந்தது. தோன்றுதல் வெளிப்படையாக விளங்குதல்.

(எ-டு) கண்டான், உண்பான் - இவை முறையே இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டின; கரியன், பெரியன், அரிது, பெரிது - இவை காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. கூறுவோன் கருத்தின்படி காலம் காட்டும். விளக்கம் பின்வரும் சூத்திரங்களில் காண்க.

## சூத்திரம் 199

காலம் தாமே மூன்றென மொழிப

(ப.ரை.) காலம் தாம் - காலங்கள், மூன்று என - மூன்று என்று, மொழிப - கூறுவர் அறிஞர்.

காலம் மூவகைப்படும்.

(வி.ரை.) [illegible] காலங்கள் - இறப்பு (சென்றது), நிகழ்வு [illegible], எதிர்வு (வருவது). இவை முறையே இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனப்படும்.

(எ-டு) நடந்தான் - இறந்த காலம் (செயல் முடிந்து விட்டது)
நடக்கிறான் - நிகழ்காலம் (செயல் நடக்கிறது)
நடப்பான் - எதிர் காலம் (செயல் இனி நடக்க இருக்கிறது)

## சூத்திரம் 200

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
மெய்ந்நிலை உடைய தோன்றல் ஆறே.

(ப.ரை.) இறப்பு - இறந்த காலம், நிகழ்வு - நிகழ் காலம், எதிர்வு - வருங்காலம், என்றா - என்ற, அ-முக்காலமும் - அம்மூன்று காலங்களும், குறிப்பொடும் கொள்ளும் - குறிப்பினாலும் பெறப்படும், மெய் நிலை உடைய - உண்மைத் தன்மை உடையனவாம், தோன்றல் ஆறு - அக்காலங்கள் விளங்கும் முறை இதுவாம்.

காலங்கள் மூன்றும் வினைச் சொல்லில் வெளிப்படத் தோன்றி விளங்குவதன்றிக் குறிப்பாலும் புலப்படும் என்பதாம்.

(வி.ரை.) குறிப்பு - மனத்தில் குறிக்கப்படுவது. கூறுவோன் என்ன நினைத்துக் கூறுகிறானோ அது குறிப்பு எனப்படும். கூறும் ஒருவன் இறந்த காலத்தை நினைத்துக் கூறினால் இறந்த காலமாகும். இவ்வாறே பிறவும் ஆம்.

வினைச்சொற்கள் காலம் காட்டும் உறுப்புக்களைப் (இடை நிலைகளை) பெற்று வரின் காலம் வெளிப்படையாகும்; இடைநிலைகள் இன்றி வரும் வினைகள் குறிப்பால் காலம் காட்டும். எப்படியும் வினைச்சொல் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ காலம் காட்டும். இன் - சாரியை, ஏ - அசை.

(எ-டு) கண்ணன் கரியன் - இத்தொடரில் கரியன் வினைமுற்று. இது காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. ஒருவன், கண்ணன் (நேற்றுக்) கரியன் என்று நினைத்துக் கூறினால், கரியன் என்பது இறந்த காலம் உணர்த்தும்; இன்று கரியன் எனின் நிகழ்காலமும், நாளைக் கரியன் ஆவான் என்று கருதிக் கூறின் வருங்காலமும் உணர்த்தும். வெளிப்படையாகக் காலம் காட்டாதது குறிப்பு வினை எனப்படும்.

## சூத்திரம் 201

(வினைச் சொற்களின் வகை)

**குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்**
**காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்**
**உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்**
**ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்**
**அம்மூ வுருபின தோன்றல் ஆறே.**

(ப.ரை.) குறிப்பினும் - குறிப்புப் பொருளிலும், வினையினும் - தொழிற் பொருளிலும், நெறிப்படத் தோன்றி - முறையாக வெளிப்பட்டு, காலமொடு வருஉம் - காலம் குறித்து வரும், வினைச்சொல் எல்லாம் - வினைச்சொற்கள் எல்லாம், உயர்திணைக்கு உரிமையும் - உயர்திணைக்கு உரியனவும், அஃறிணைக்கு உரிமையும் - அஃறிணைக்கு உரியனவும், அ இரு திணைக்கும் - அந்த இரண்டு திணைகளுக்கும் ஓர் அன்ன உரிமையும் - ஒத்த உரிமை உடையன எனவும், தோன்றல் ஆறு - அவ்வினைச் சொற்கள் தோன்றும்

நெறி, அ மூ உருபின - அம்மூன்று நிலையின ஆகும்.

எல்லா வினைச் சொற்களும் திணைவகையால் உயர்திணை வினை, அஃறிணை வினை, பொதுவினை என மூவகைப்பட்டுக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ காலம் காட்டி நிற்கும்.

(வி.ரை.) வரூஉம் - அளபெடை; வரும் என்பதே சொல். அ இரு - என்பதில் 'அ' நீண்டு 'ஆ' ஆயிற்று. உருபு - இங்கு நிலை, படிவம், வகை. பொது வினை - உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான வினை; இது விரவுத்திணை வினை எனவும் படும். ஆறு - முறை, நெறி. 'ஏ' - அசை. இச்சூத்திரம் திணையின் அடிப்படையில் வினைச் சொற்களை வகைப்படுத்துவகதாகும். குறிப்பு - வெளிப்படைக்கு எதிரானது. விளக்கம் மேல் கூறப்பட்டது

(எ-டு) உண்டான் - உயர்திணை (காலம் வெளிப்படை)
கரியன் - (காலம் குறிப்பால் காட்டும்)
சென்றது - அஃறிணை (காலம் வெளிப்படை)
செய்யது (செம்மையானது) அஃறிணை (காலம் குறிப்பு)
வந்தனை (முன்னிலை வினை) - பொது வினை

(தொடரும்)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே
- நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.
- மூதுரை

# சித்த வட மடம்

- பேரறிஞர் அ.மா.பரிமணம்

சங்க காலத்தும் அதனையடுத்த இரட்டைக் காப்பியக் காலத்தும், இளமை, அழகு, அறியாமை முதலிய பொருட்களில் வழங்கப் பெற்ற மடம் என்னும் சொல் முனிவர், துறவியர் முதலியோர் உறையும் இடங்களைக் குறிக்க வழங்கப்பட்டதாக அறியக்கூடவில்லை. அக்காலத்தே தமிழகத்தில் துறவியர், முனிவர் முதலியோர் வாழ்ந்துள்ளமையால் அவர்கள் உறைதற்கென அமைந்த இடங்களும், அவற்றினைக் குறிக்கும் பெயரும் இருந்திருத்தல் வேண்டும். துறவுக்கு முதன்மையளிக்கும் சமணம், புத்தம் ஆகிய சமயங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற நிலையில், துறவியர் உறையும் இடங்களும் முதன்மை பெற்றுப் பாழி, பள்ளி போன்ற அவ்விடப் பெயர்கள் செய்யுள் வழக்கிலும் பேச்சு வழக்கிலும் இடம் பெற்றன. அந்நிலையில் மடம் என்னும் சொல் பொதுவாக இந்து சமயத்தவர் எனக் கருதப்படும் சைவ, வைணவ சமயத் துறவியர் உறையும் இடங்களையும், அச்சமய ஆசாரியர் உறையும் இடங்களையும் குறிக்கும் சொல்லாய் அமைந்து, தமிழ் வடிவம் பெற்றுத் தமிழில் இடம் பெறலாயிற்று. அது பன்னெடுங்காலமாய் வழங்கி வருவதனை, ஆதிசங்கரர் அமைத்த சமய நிறுவனங்களும், அண்மைக் காலத்தில் இராமகிருட்டிணர் உருவாக்கிய சமய நிறுவனமும் உணர்த்துகின்றன. அதனையே தமிழகத்தில் இன்று சிறப்புற்று விளங்கும் திருமடங்களும் உணர்த்துகின்றன.

சைவ சமயச் சான்றோர்களின் வரலாறுணர்த்தும் சேக்கிழார், நாயன்மார் சிலர் வரலாற்றில் இடம் பெறும் மடங்கள் சிலவற்றை அவற்றின் சிறப்புப் புலப்படுமாறு காட்டியுள்ளார். அவற்றுள் திலகவதியார் திருமடம், திருமுருவர் திருமடம், வீழிமிழலையில் அப்பர் சம்பந்தர் திருமடங்கள் சிலவாகும். அத்தகு மடங்களுள் சித்த வட மடமும் ஒன்றாகும். தேவார மூவருள், இருவரொடு தொடர்புடையதாய் ஒருவரது வாக்கிலும் மற்றவரது வாழ்விலும் இடம் பெற்றதாய் விளங்கும்

தனிச்சிறப்பு இதற்குண்டு. இதன் பெருமையைச் சிவக் கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியாரவர்கள், "நம்பிகள் பரிசனங்களுடன் எழுந்தருளிய பெருமையும், அன்றிரவு இறைவன் கிழவேதியனாக வந்து தாமும் கூடவே பள்ளி கொண்டு நம்பிகளது திருமுடிமேல் இருமுறை தமது திருமுடி சூட்டிய பெருமையும், இங்கிருந்த நம்பிகள் 'தம்மானை அறியாத சாதியார்' என்ற திருப்பதிகத்தைத் திருவதிகை இறைவன் மீது பாடிய பெருமையும் உடையது"

தேவாரமும் திவ்வியப் பிரபந்தமும் செழித்த பத்தி மறு மலர்ச்சிக் காலத்தில் தமிழகத்தில், 'திருக்கோயில் இல்லாத திரு வில்ஊர்கள் அடவி காடுகளாம்' என்னும் நிலைமை உருவாகியதன் பயனாக, ஊர்தோறும் திருக்கோயில்கள் தோன்றலாயின. இறையடியார்கள் தங்கி இறைபணி இயற்றுதற்கான திருமடங்களும், திருமடத்துள்ளே உறைவார் வழிபடுதற்கெனச் சிற்றாலயங்களும் உருவாயின. அத்தகு மடங்களுள் ஒன்று - காவிரியின் தென்கரைத் தேவாரத் தலங்களுள் ஒன்றான திரு அழுந்தூர்த் (அழுந்தை) திருக்கோயில் வளாகத்துள் 'மாமடம்' என்று சிறப்பிக்கப் பெற்ற திருமடம் ஒன்று - இருந்ததனையும், அதன்கண் இருந்து அந்தணர்கள் மறையோதி வழிபாடு செய்து வந்ததனையும், ஞான சம்பந்தர் தமது பதிகத்தில் விக்கியுள்ளார். தல இறைவன் பெயர் வேத புரீசுவரர், இறைவி பெயர் சவுந்தரியம்பிகை ஆகும். இத்தல இறைவன், மறையவர்கள் மாமறை ஓதி வழிபடுமாறு மாமடத்தில் அமைந்து விளங்கினான் என்பதனைப் பதிகப் பாடல்தோறும், மன்னினையே, மேவினையே முதலான முன்னிலை வாசகத்தால் குறிப்பிட்டுள்ளார். அங்குள்ள மாமடத்துள் இருந்து மறை பயிலும் அந்தணர்கள் ஆன்மார்த்தமாக வழிபடுவதற்கு கலிங்க மூர்த்தத்தோடு கூடிய சிற்றாலயம் ஒன்று வளாகத்தினுள்ளேயே இருப்பதனை இன்றும் காணலாம்.

> 'அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்
> வழிபாடு செய் மாமடம் மன்னினையே' - (2-20-1)

'அறையார் கழலாய் அழுந்தை மறையோர்
மறவா தெழ மாமடம் மன்னினையே' - (2-20-6)

அழுந்தை மாமடம் பல்வகைச் சிறப்புகளோடும் திகழ்ந்தமையால் அதனை 'நெடுமாகர்' என்றும், ஆளுடைய பிள்ளையார் குறிப்பிட்டுள்ளார். அந்த மாமடத்து இறைவனைத் திருபடமுடைய நாயனார் என்று அத்திருக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. காவிரியிலிருந்து, இறைவன் திருமஞ்சனத்திற்கு நீர் கொணர்தற்கு நிவந்தம் அளிக்கப்பட்ட செய்கையினைக் கல்வெட்டு உணர்த்துகிறது.

திருமுறைகளால் அறியப்படும் இது போலும் சிறப்பு மிக்க திருமடங்களுள் ஒன்று சித்த வட மடமாகும். அது பற்றித் திருமுறைகளால் அறியப்படுவனவற்றைக் காண்பது பயனுடையதாகும். அப்பரடிகளின் தேவாரத்தில் 'சித்த வடம்' என்பது காணப்படுகின்றது. (4-2-3). நான்காந் திருமுறைக் குறிப்புரையாசிரியர் சிவத் திரு முத்து. சு. மாணிக்கவாசகனார் இதனை 'அதிகைக்கு அருகில் ஒரு சைவ மடம் உள்ள ஊர்' என்று விளக்கியுள்ளார். இப் பெயர் இடம் பெறும் பதிகம் அப்பரின் பிறபதிகம் ஒவ்வொன்றையும் போலவே தனிச் சிறப்புக் கொண்டதாகும். சமணர் ஏவிய கொல் யானை கண்டஞ்சாது அப்பர் அருளிய அருட்பதிகம் இதுவாகும். இப்பதிகப் பாடல் அனைத்தும் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்னும் தொடரை ஈற்றடி மகுடமாகக் கொண்டுள்ளது. 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' எனும் மன உரத்தை உறுதிப்படுத்தும் வகையில், அஞ்சுவதும் அஞ்ச வருவதும் இல்லை என்று கூறியதற்குக் காரணமாகக் 'கெடிலப்புனலும் உடையார் தமர் நாம்' என்பதனை பாடல் தோறும் நான்காமடியில் காட்டியுள்ளார். இறைவனைத் தம் உள்ளத்திருத்திய இறையடியார்க்கு அஞ்சவும் அதிரவும் வருவதொரு நோய் யாண்டும் உளதாகாது என்பதனை வலியுறுத்தும் திருமுறைப் பதிகங்களுள் இஃதொன்றாம். பாடல்கள் அனைத்திலும் சிவபரம்பொருள், தற்கிழமையாகவும் பிறிதின் கிழமையாகவும் கொண்டுள்ள உடைமைகள் பலவும் கூறப்பட்டுள்ளன. பவள நிறம், மால் தழுவிய பாகம், மணி

மிடறு ஆகியன தற்கிழமை உடைமைகள். சுடர்த் திங்கள், சூளாமணி, கேழல், ஆமை, நாகம், உருத்திர பட்டம், முத்து வடம், கண்டிகை, மூவிலை வேல், மழு, வீணை, இரு சுடர் முதலிய இருபத்தைந்திற்கும் மேற்பட்ட உடைமைகள் பிறிதின் கிழமையனவாம். இந்த உடைமைப்பட்டியலுள், சிவன் சென்னியில் அமர் கங்கை விடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் நுட்பமாகப் பார்த்தால் பத்து இடங்களில் கங்கை இடம் பெற்றிருப்பது புலனாகும். பாடல் அனைத்திலும் 'கெடிலப் புனலும் உடையார்' என்பதனைச் சிந்தித்தால் அது 'கங்கைப் புனலும் உடையார்' என்று கூறியதனை ஒக்கும் என்பது விளங்கும். அதிகை வீரட்டானர் சிவபெருமானாயின், அதன் அருகே புனல் பெருக்கும் கெடில நதி கங்கையாகுமன்றோ! அப்பரடிகள் கருதிய இந்த நுட்பத்தை அறிந்த சேக்கிழார், கெடில நதியினைக் கூறுங்கால், 'தென் திசையில் கங்கையெனும் திருக்கெடிலம்' என்று புலப்படுத்தியுள்ளார்.

இப்பதிகத்தில் சிவபெருமான் உடைமைகளாகக் கூறப்பட்டவற்றுள் சித்த வடத்தையும் கெடிலப் புனலையும் ஒழித்து, ஏனையவெல்லாம் எங்கும் காட்சியளிக்க வல்ல சிவபரம் பொருளின் "பொதுவுடைமை"களாகும். சித்த வடமும் கெடிலப் புனலும் திருவதிகை எல்லையில் அப்பரம்பொருளின் "தனியுடைமை"யாகும். அதனால் கெடிலப் புனல் அதிகைக்குரிய சிறப்பானது போலச் சித்த வடமும் அதிகைக்குரிய சிறப்பாதல் வேண்டும். அது, அதிகையின் எல்லைப் புறத்துப் புரம்பினை சார்ந்ததாக விளங்கும் ஓரிடமாக அமைந்திருந்தது. 'சித்த வடம்' எனும் பெயர்க் காரணத்தை இப்பதிகத்தால் அறிய இயலாவிடினும், அஃது சிவபெருமான் உகக்கும் இடமாகத் திகழ்ந்தது எனக் கோடல் தவறாகாது.

அடுத்துச் சேக்கிழார், சுந்தரர் வரலாறு கூறும் தடுத்தாட் கொண்ட புராணத்தில், இந்தச் சித்த வடமும், ஆண்டுத் திகழ்ந்த மடமும் இடம் பெறுகின்றன. சுந்தரர் திருநாவலூர், திருத்துறையூர் முதலிய பதிகளை வழிபட்டுத் தில்லையைக் காணும் வேட்கையில் திருவதிகை நோக்கிச் செல்கின்றார்.

மாலை நேரமாகியது. அப்பரடிகள் உழவாரத் திருப்பணி புரிந்த தலமாதலின் அதனை மிதித்துச் செல்லுதலை விரும்பாமல், திருவதிகையின் எல்லையில், வெளியே வயல்களோடு விளங்கும் சித்தவட மடத்தே தங்குகின்றார்.

இதனைச் சேக்கிழார் 'வரி வளர் பூஞ்சோலை சூழ் மடத்தின்கண் வன்றொண்டர்... வீரட்டானத்து இறைதாள் பரிவுடைய மனத்தினராய்... துயில்கொள்ளப் பள்ளியமர்ந்தருளினார்' என்று குறிப்பிடுகின்றார். இறைவன் அவருக்குத் திருவடித் தீக்கை அடைவித்தற் பொருட்டு, ஒருவரும் அறியாமல் முதிய அந்தணர் வடிவொடு சென்று உறங்குவார் போல் இருந்து, சுந்தரர் திருமுடிமேல் திருவடி படச் செய்தது முதலிய அருட்செயலைச் சைவ உலகம் நன்கறியும். தம் திருமுடி மேல் அடிசூட்டிவன் கைலை நாதனே எனவுணர்ந்த சுந்தரர் அவ்விடத்திருந்தே, 'தம்மானை அதிகைப் பெருமான் அடி வணங்கி மேற்சொல்லலானார். சித்த வட மடம் பொது மடமாதலின் சுந்தரர் தம் பரிசனத்தொடு சென்று துயில் கொள்ளவும், சிவபெருமான் ஒருவருமறியாமல் முதிய அந்தணர் கோலத்தில் மடத்தினுட் புகுந்து உறங்குவார் போல் கிடந்தருள வாய்ப்பாயிற்று. சேக்கிழார் வாக்கினால், சித்த வட மடம் அதிகையின் புறத்தே புறம்பணையில் அமைந்திருந்தது என்றும், அது வரிவளர் சோலை சூழ்ந்தது என்றும், பொதுமடம் என்று மட்டுமே அறிய முடிகின்றது. அக் காலத்தே திருமடங்கள் குறிப்பிட்டோர் குறிப்பிட்ட செயல் கருதி உறையும் தனித் திருமடங்களாகவும், இறையன்பராயினார் எவரும் வேறுபாடின்றிச் சென்றுறையும் திருமடங்களாகவும் இருந்துள்ளமையினை அறியலாம். இன்றும் அந் நிலை தொடர்வதனைச் சமய ஆசாரியர்கள் உறையும் சில திருமடங்களிற் காணலாம்.

சித்த வட மடம் பற்றி மேலும் சில செய்திகளைப் பிற்காலத் தலபுராணம் போலும் நூலொன்று கூறுகின்றது. அமைச்சராக விளங்கிய சேக்கிழார், தொண்டத் தொகையிலும், தொண்டர் அந்தாதியிலும் முறையே தொகுத்தும் வகுத்தும் கூறப்பட்ட நாயன்மார்களின் வரலாற்றைத் திருவருட்டுணையாலும், தம்முடைய ஞானத்தாலும் திருத்தொண்டர் புராணமாக, பெரிய புராணமாக -

விரிந்துரைத்த பின்னர், அத் திருநூலினை இறுதித் திருமுறையாகச் சைவ உலகம் ஏற்றுக் கொண்ட பின்னர் அதனுள் கூறப்பட்டுள்ள வரலாறைத்த இருத்திக் கூறவோ, மாற்றி உரைக்கவோ எவரும் முற்படவில்லை. அந்த அளவிற்குச் சேக்கிழார் மீது சைவ உலகம் நம்பிக்கை கொண்டுள்ளது. சேக்கிழார் காலத்திற்கு முற்பட்ட சைவப் பனுவல் சிலவற்றுள்ளும் சிற்பம் ஓவியம் ஆகியவற்றுள்ளும் கண்ணப்பர் வரலாற்றிற் சிற்சில வேறுபாடுகள் காணப்பட, அவருக்குப் பிற்பட்ட காலத்தில் அத்தகு ஆவணங்கள் பெரும்பாலும் சேக்கிழாரை ஒட்டியே செல்லக் காண்பது இந்த உண்மையை எண்பிக்கும் சான்றாகும். யாரேனுமொருவர் நாயன்மார் வரலாற்றில் சேக்கிழாரால் கூறப்படாதவற்றைக் கூறினாலோ, மாறுபடக் கூறினாலோ தக்க சான்றுகள் இல்லாவிட்டால் அவை புறக்கணிக்கப்படும். இந்நிலையில், திருநாவுக்கரசர் வரலாறு கூறும் வகையில் சேக்கிழார் கூறாச் செய்திகளும், சிறிதே வேறுபடும் செய்திகளும் கூறப்பட்டுள்ள ஒரு நூல் ஒன்று சிந்திப்பதற்குரியதாகின்றது. அந்நூலாசிரியரின் மனக் கோள் இதுவென அறிதல் பயனுடையது. நூலாசிரியர் சிறந்த சைவப் பற்றும் ஒழுக்கமும் சான்றவராய், நாயன்மார்கள் மாட்டு அளவற்ற ஈடுபாடு உடையவராய், சேக்கிழார்பால் பெருமதிப்புக் கொண்டவராய் இருத்தலின் நூலினை ஆதாரத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

சிவத்திருவன்றொண்டர் மாணவர்களுள் ஒருவரும், செய்ந்நாட்டு நகரத்தார் மரபில் தோன்றியவரும், காரைக்குடி ராம.கு.ராமநாத செட்டியார் புதல்வருமாகிய சிவத்திரு சொக்கலிங்கம் செட்டியார், தலபுராண வகையில், 'சித்த வட மான்மியம்' என்னும் ஒரு நூலினை இயற்றியுள்ளார். அவர்கள், நாவுக்கரசர் திருவாக்கிலும், சுந்தரரின் வாழ்விலும் முறையே இடம் பெற்றுள்ள சித்த வடம், சித்த வட மடம் ஆகியவற்றின் சிறப்புணர்ந்து அதன் பெருமைகளை விளக்கும் வகையில் 388 விருத்தங்களால் இந்நூலினை இயற்றியுள்ளார். இந்த நூல் கடவுள் வாழ்த்து, பாயிரம், சித்த வடச் சருக்கம், சுந்தரச் சருக்கம், பல கதைச் சருக்கம் எனும் ஐந்து பகுதிகள் கொண்டுள்ளது.

நடு நாட்டில் சிறப்புற்றிலங்கும் எட்டு பதிகளுள் சித்த வடம் ஒன்று என்றும், இதனை அடுத்துத் திருவாரூர், திருநாவலூர், திருவெண்ணெய் நல்லூர், மணம் வந்த புத்தூர்,

திருத்துறையூர், திருவதிகை ஆகிய பதிகள் சூழ்ந்து திகழ்கின்றன என்றும், இவ்வூர் பெண்ணை கெடிலம் ஆகிய ஆறுகட்கிடையே உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆவ்வூர் இன்று கோட்டாலம் பாக்கம் என்னும் பெயரில் விளங்குகிறது. சித்த வடத்திலுள்ள திருக்கோயில் இறைவன் பெயர் ஆதிசிதம்பரேசர் என்றும், அம்மை பெயர் சிவகாமியம்மை என்றும் குறிப் பிட்டுள்ளார். இன்றும் அப்பெயர்களே வழங்கப்படுகின்றன

ஆசிரியர் முன்னுரையில், "இச்சித்த வடமாகிய சிவக்ஷேத்திரம், திருநாவுக்கரசு நாயனார், சமணர்கள் ஏவ வந்த யானைக்கெதிரே திருவாய் மலர்ந்தருளிய திருவதிகை வீரட்டானத் திருப்பதிகத்துள்ளே, "— சித்த வடமும் அதிகைச் சேணுயர் வீரட்டமும்..." என்பது முதலிய தேவாரங்களாலே துதிக்கப் பெற்றது." என்றும், "இத்தலத்துக்குரிய தேவாரத் தனித் திருப்பதிகங்கள் முன் சிதம்பர க்ஷேத்திரத்திலே வன்மீகங் கொண்ட தேவாரம் பதிகங்களோடு சேர்ந்தன போலும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். சித்த வட தலத்திற்குத் தனித் திருப்பதிகங்கள் இருந்து மறைந்திருத்தல் கூடும் என்பது நூலாசிரியர் கருத்து. சித்த வடம் என்பதனை ஊராகக் கொண்டாலும், ஆண்டுத் திருக்கோயில் இருந்ததனை உணர்த்தும் குறிப்பினைச் சேக்கிழார் வாக்கில் காண முடியவில்லை. ஆண்டுச் சித்த வட மடமும், அதில் இறைவன் நிகழ்த்திய அருட் செயலும் பற்றி மட்டுமே அறிய முடிகிறது.

ஆசிரியர் தமது மான்மிய நூலுக்குத் தேவையான, அப்பர், சுந்தரர் ஆகிய இருவர் வரலாறுகளை மட்டுமே எடுத்துக் கொண்டுள்ளார். இந்த நூலினைச் சேக்கிழார் பெருமான் ஆக்கிய மாக்கதையினை மனத்துட் கொண்டும், உபதேசகாண்ட நூலினை உளங்கொண்டும் தாம் செய்ததனை ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்:

"சொன்ன தனி மாக்கதையில் தொகுத்த சில விரித்தும் தொகுத்தும்மேலும்,
நன்னர் உபதேச காண்ட முதல் நூலினும் இந்த நகர் முன்னாகப்
பன்னுமுனைப் பாடி நகர்ப் பண்டுள சாதன விகிதப் பகுப்பினுள்ளும்
இந்நகர் மாண்பு உள்ளன ஓர்ந்து எடுத்துமொரு காதையென இசைத்துளேனால்"

இந்த நூல் சேக்கிழாரை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாமல் பிற நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, சித்தவடத்தின் மான்மியம் (மகிமை) கூற முற்பட்டுள்ளமையால், சேக்கிழாரின் கருத்துக்களுக்கு வேறுபட்டனவாகவும், புதுமை கொண்டனவாகவும் அமையுமிடங்களை, நன்கு ஆய்ந்து அவை, நாயன்மார்க்கும் சேக்கிழார்க்கும் பெருமை சேர்ப்பினவாயின் கொள்ளுவதும், அங்ஙனமல்லவாயின் புறக்கணிப்பதும் சைவர்களின் கடமையாகும்.

சித்தவட மான்மிய வழியே செய்திகளைக் காண்போம். கடவுள் வாழ்த்துப் பகுதியில் வீரட்டேசுரர் துதி கூறுமிடத்து அப்பெருமான், "சித்தவட மடத்திற்கு அதிகை ஒரீஇ வந்தாங்கு அன்புதரு திலகவதி அன்னை தனக்கு அருள்புரம்" என்கின்றார். வீரட்டானேசுவரர் திலகவதிக்காக, அதிகைக் கோயிலின் நீங்கி, சித்த வடமடம் உள்ள கோயிலில் ஆதிசிதம்பரேசர் இலிங்கவடிவில் மேற்கு முகமாக இருந்தருள்புரிய, அம்மை சிவகாமவல்லி பூர்வ அபிமுகத்து அமர்ந்து அருள்புரிகின்றார். ஆங்குக் கூப தீர்த்தம் முதலியன உள்ளன. திருக்கோயிலின் மேற்கு வாயிலின் வலப்பக்கம் ஒரு திருமடம் திலகவதி மடம் என்னும் பெயரில் உகலம் சிறக்க விளங்குகிறது. இத்திருமடம், திருநாவுக்கரசருக்குத் திலகவதியார் திருமந்திர நீரோடு, அருளறம் நல்கி அருள் புரிந்த இடமாகும். இத்திருமடத்தின்பால், வடபகுதியில், ஒரு வடமரம் (ஆலமரம்) திகழும். அங்கு எல்லாம் வல்ல சித்த குருமணி வீற்றிருக்கச் சனக முனிவர் முதலிய சித்தர் வீற்றிருப்பர். அம்மர நிழலில் பல சித்தர்கள் வந்தமர்வர். எல்லாம். வல்ல சித்த குருமணி வீற்றிருப்பதாலும், சித்தர்கள் சூழவிருப்பதாலும், அது சித்த வடம் எனப்பட்டது. (அதுவே ஊர்ப் பெயரானது).

தமக்கையார், தமக்காக உயிர் துறவாது துறவுபூண்டு வாழுங்கால் பல் வகை அறங்கள் புரிந்த மருள் நீக்கியார், சித்த வடத்து ஈசர் கோயில் அருகில், சந்நிதித் தெருவில், வடக்கே வடம் (ஆலமரம்) விளங்குமிடத்தே ஒரு மடாலயம் அமைத்தார். அந்த மடத்தில் தங்கி, இறை திருப்பணிகளைத் திலகவதியார் செய்து வந்தார். தம்பியார் சமணம் சார்ந்தபின், அவரை மீண்டும் சைவ சமயஞ் சேர்க்க அருளுமாறு வேண்டுகின்றார். இவ்வாறு

அதிகை வீரட்டரை வணங்கிச் "சித்த வட மடத்து அமளி" மேவுநாளில் ஒரு நாள், திலவதியார் கனவில் தோன்றி, "நின் தம்பி, ஆவணி மூலநாளில் நும்மை வந்தடைவான். திருநீறு திருவைந்தெழுத்தால் நோய் நீங்கும். உழவாரம் கையிற் கொடுத்து நம்பால் கொணர்வாய்" என்று கூறி மறைந்தான். (திலகவதியார் கனவில் தோன்றி இறைவன் அளித்த காட்சி, சித்த வடத் திருக்கோயிற் கருவறையினுள் இன்றும் காணலாம் என்று ஆசிரியர் கூறியுள்ளார்). சித்த வட மடப் பகுதியில் வந்து தன்னை அடைந்த தம்பிக்கு, நீறு அளித்து மந்திரம் அருளி, கூப தீர்த்த நீர் அருந்தச் செய்து, சூலை நோய் நீங்கச் செய்தார். தம்பியை அதிகை வீரட்டேசர் முன் அழைத்துச் சென்றார். திலகவதியார் - நாவுக்கரசர் தொடர்பாக மான்மியம் ஒரு கால் உபதேச காண்டத்தின் உபயமாக இருக்கலாம்! இதுதான் பிற்காலத் தலபுராண, தலமான்மியப் புலவர்கள் அளிக்கும் புலமைத் தொண்டு போலும்!

சுந்தரர் வரலாற்றைப் பொறுத்த அளவில் இந் நூற் செய்திகளில் பெரிய வேறுபாடில்லை. சுந்தரர் வாழ்வில் இடம் பெற்ற சித்த வட நிகழ்ச்சியின் போது, நூலாசிரியர் பெரிய புராணச் செய்யுட்கள் சிலவற்றை அப்படியே எடுத்தாண்டுள்ளார். இது பற்றிக் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்றுள்ளது. திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இருவர் வரலாறு கூறுங்கால், ஆசிரியர் இடையே பெரிய புராணச் செய்யுட்கள் சிலவற்றை இணைத்துள்ளார். அது பற்றி அவர் கூறுங்கால், "அவ் வருட் பாசுரம் எவ்விடத் திருப்பினும், திருவருள் விலாசத் தொரு பெரும் வாய்மை, அருமை யற்புதப் பொருள் நயமாதியால், எத்தகு கவியினும் ஒத்தெண்ணுறாது, வேற்றுமை தெரிக்கும் பேற்றின வாகும். ஆயினும் என் போலும் சிற்றறிவினர் சிலர், என் புன் கவியோடு ஒத்து எண்ணவும் பெறுமோவென்று அவ்வபசாரத்தை அஞ்சி ஆங்காங்கு அத்திருவருட் பாசுரங்களின் முதலில் * இவ்வடையாளம் (உடுக்குறி) இடப் பெற்றுள்ளது". என்று விளக்கியுள்ளார். இதனால் இவ்வாசிரியர் பெரிய புராணத்தின்பால் கொண்டுள்ள பெருமதிப்பும், அதன் செய்யுட்களை எடுத்தாண்ட நேர்மையுணர்வும் புலனாகின்றன.

நாவுக்கரசர் கைத்திருத்தொண்டு புரிந்த தலமாதலின் அதனை மிதித்து நடக்க ஒருப்படாமல், அந்நகர்ப் பறம்பே உள்ள சித்த வட மடத்தே சுந்தரர் தங்குகின்றார். சித்த வட மடத்தே தங்கி கெடில நதியில் நீராடிச் சித்த வடப் பதியில் உறை ஆதிசிதம்பரநாதரைப் பணிந்து பல நாள் இருந்துள்ளார். சித்த வடத்தை நீங்கிப் பல பதிகளை வணங்கித் தில்லை சென்றடைகின்றார். சுந்தரர் அதிகை வீரட்டானர் திருக்கோயில் சென்றாரா என்பதனைத் தெளிவு படுத்தும் குறிப்பு நூலில் காணப்படவில்லை.

சுந்தரர் திருத்துறையூர் இறைவனைப் பாடி வழிபட்ட பின்னர், 'விசாக நாள் வைகாச மதிதனில் உபதேசம் பெற்றார் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். திலகவதியார் வேண்டுதலை ஏற்ற இறைவன் அவரது கனவில் தோன்றி, "ஆவணி மூல நாளை அனையன் வந்து அடுக்கும் நின்பால்" என்று கூறியதாக மான்மியம் குறிப்பிடுகின்றது. அப்பாடிகள் வீடுபேறெய்திய திருநாளை உணர்ந்த சேக்கிழார் அதனைச் "சித்திரையிற் சதயமாம் திருநாள்" என்று தெளிவுபடுத்தியுள்ளார். சேக்கிழாரால் அறிய முடியாத நாட்களை, மான்மிய ஆசிரியர் அறிந்து கூறியது நம் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. மான்மிய ஆசிரியர் கூற்றுக்கு, அவரது முதனூலாசிரியர் கருத்துச் சான்றாகலாமென்றால், அம்முதனூலாசிரியர் கருத்திற்கு எது சான்றாகும்? சைவ. சமய வரலாற்று நாயகர்களாக விளங்கிய மூவர் வாழ்வில், சேக்கிழாரால் உணர்த்தப்படாதென கூறக் கண்டால் அவற்றை ஏற்பதில் தயக்கம் உண்டாவது இயல்பே.

சித்த வடம் என்னும் தலம் இந்நாளில் கோட்டாலம் பாக்கம் என வழங்கப்படுவதனை, அவ்வூர்த் திருக்கோயிலில் இக்காலத்தே அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது. கோட்டாலம் என்பது, கோடுகள் (கிளைகள்) நிறைந்த ஆலமரம் என்று பொருள் பட்டுச் சித்த வடம் என்பதன் மறுபெயர் போல அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

# தொல்காப்பியக் களவியல் - ஒரு சமுதாய இயற்பார்வை - மறு சிந்தனை

பேரறிஞர் பழ. முத்துவீரப்பன்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் நிகழ்த்திய தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் குறித்த தேசியக் கருத்தரங்கில், தொல்காப்பியக் களவியல் ஒரு சமுதாய இயற்பார்வை என்னும் தலைப்பில் புதிய செய்திகள் என்னும் உள் தலைப்பின் கீழ் பொருந்தாத கருத்துகள் சில சுட்டப்பட்டுள்ளன. அச் செய்திகள் குறித்து ஆய்வுலகின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை எழுப்பட்டுள்ளது.

## *அற்றைக் குடும்ப அமைப்பு தாய்க்குத் தலைமையிடம் தந்ததா?*

களவியலில் உள்ள 50 நூற்பாக்களில் நாற்பத்து ஆறாம் நூற்பாவில்தான் தந்தையும், தமையன்மாரும் சுட்டப்படுகின்றனர். தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் ஆகியோர் கூற்றிற்கு உரியராக இருக்கத் தந்தையும், தனையரும் கூற்றுக்கு உரியோராகக் காட்டப்படவில்லை. இவ்வமைப்பை உற்று நோக்கும் போது அற்றைக் குடும்ப அமைப்பு தாயைத் தலைமையாகக் கொண்டதாக இருந்தது என்று உய்த்துணரலாம் என்கிறார் டாக்டர்.க.ப.அறவாணன்.

அகவாழ்க்கை என்பது ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவானதுதான். ஆனால், உணர்வுப் பரிமாற்றத்தில் ஆணைவிட முதன்மை பெறுபவள் பெண்தான். எனவேதான், அகவாழ்க்கை இலக்கணங்கள் பெண்ணை முதன்மைப்படுத்தியே அமைந்துள்ளன. களவு கற்பு வாழ்க்கையில் இருபாலார்க்கும் மெய்ப்பாடுகள் உண்டு என்றாலும் பெண்ணை வைத்தே மெய்ப்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

தலைவியின் உணர்வுகளைத் தோழியே நன்கு அறிவாள். அடுத்த நிலையில் செவிலித்தாயும், நற்றாயும் அறிவார்கள். அது போல் தலைவனின் உணர்வுகளைப் பாங்கனே அறிவான். எனவேதான் இந்த அறுவரும் கூற்றுக்கு உரியோராகக் காட்டப்பட்டுள்ளனர். பெண்ணின் உள் உணர்வுகளை மற்றொரு பெண்ணால்தான் நன்கு உணரமுடியும். ஆண்மகனால் பெண்ணின் அக உணர்வுகளை முழுமையாக உணர முடியாது என்பது எல்லோர்க்கும் தெரிந்த உண்மையாகும். இதனால்தான் தந்தையும் தனையரும் கூற்றிற்கு உரியோராகச் சுட்டப்படவில்லை. களவு வாழ்க்கையில் இப்பாத்திரங்கள் பெறும் இடம் குறைவுதான் என்பதால் இறுதியாகச் சுட்டப்பட்டுள்ளனர். மேலும் தாயைத் தலைமையாகக் கொண்ட குடும்ப அமைப்பு சங்க காலத்தில் இருந்தது என்ற கருத்தை நிறுவ அறவாணர் காட்டுவன பொருத்தமான சான்றுகளாகத் தெரியவில்லை தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் ஒத்த காலத்தில் தோன்றவில்லை என்றாலும் தொல்காப்பியம் சுட்டும் இலக்கணக் கூறுகள் பேரளவு சங்க இலக்கியங்களுக்குப் பொருந்தி வருவதை அறிஞர்கள் ஒப்புவர்.

'வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே.'

(குறுந்தொகை 135)

'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே (புறம்)

எனும் சங்கப்பாடல்கள் ஆணின் முதன்மையை நிறுவுவன. ஐங்குறுநூற்று மருதப்பத்தில், நான் வரையாதிருந்தபோது, என்ன நினைத்தீர்கள் என்று தலைவன் கேட்க, 'தண்டுறை ஊரன் வரைக எந்தையும் கொடுக்க என வேட்டேமே' எனத் தோழி பதில் கூறுகிறாள். குடும்ப வாழ்வில் முடிவெடுக்கும் பொறுப்பு ஆடவருக்கே இருந்தது என்பது இப்பாடலால் தெளிவாகப் புலனாகிறது. அறத்துடன் நிற்கும் போது தோழி செவிலித் தாயிடமும் செவிலித்தாய் நற்றாயிடமும் நற்றாய் தமையன்மாரிடமும் உணர்த்துவாள் என்பதும் முடிவெடுக்கும் உரிமை ஆண்களிடமே இருந்தது என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

## அச்சம், நாணம், மடம் என்பன களவுக்காலப் பெண் பண்புகளா?

பெருமையும் உரனும் ஆடவனுக்குரிய பண்புகள். அச்சமும், நாணமும் மடனும் பெண்ணுக்குரிய பண்புகள் என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. இவற்றைக் கூர்ந்து நோக்கின் மேற்குறித்த பண்புகள் ஆடவர்க்கும் மகளிர்க்கும் காலம் முழுதும் உரியன அல்ல என்பது புலப்படும் என்கிறார் கா.பா. அறவாணன். அச்சம் என்பதை, 'புதிய ஆடவன் ஒருவனோடு பழகும் போது பெண்ணுக்குத் திருமணம் நிகழ்வதற்கு முன்பு இருக்க வேண்டிய கள்ளக் குழந்தைப் பேறு, குடும்ப அவமானம் பற்றிய அச்சத்தையே தொல்காப்பியர் வற்புறுத்துகிறார் என விளக்கமும் தந்துள்ளார். அச்சமாவது அன்பு காரணமாகத் தோன்றும் உட்கு'. நாணமாவது காமக்குறிப்பு நிகழ்ந்தவழிப் படுவதோர் உள்ள ஒடுக்கம். மடன் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என நச்சினாக்கினியர் விளக்குவர். நாணமாவது பெண்ணுக்குப் பொலிவு தரும் உள்ளப்பாங்கு. மடன் ஆவது செவிலி முதலானோர் உணர்த்துவனவற்றை ஆராயாது மேற்கொள்ளுதலும் அங்ஙனம் கொண்டவற்றை இறுகப்பற்றி ஒழுகுதலுமாம் என விளக்குவர் சா.பாலசுந்தரம் அறத்திற்கு மாறான கருத்துக்களை இலக்கியப் பொருளாக ஆக்க வேண்டிய தேவை ஏற்படும் போது, படிப்பவர் நாணம் கொள்ளும்படி நெறிப்படுத்தும் போக்கில் படைப்பாளி எழுதிச் செல்ல வேண்டும் என்பது தொல்காப்பியர் கோட்பாடு ஆகும் (மீக்க பொருளினுள் பொருள் வகை புணர்க்க நாணுத் தலைப்பிரியா நல்வழிப்படுத்தே) விதி விலக்குகளுக்கு விதி செய்வது தொல்காப்பியர் பழக்கமில்லை. எனவே அச்சம் என்பதனைக் கள்ளக் குழந்தைப் பேறு பற்றிய அச்சம் என்று அறவாணன் விளக்குவது ஏற்புடையதாக இல்லை. மெய்ப்பாட்டியல் கற்பு வாழ்க்கையில் தலைவிக்குரிய மெய்ப்பாடுகளைக் குறிப்பிடும். போது தெய்வம் அஞ்சல் என்று குறிப்பிட்டிருப்பதையும் இணைத்துப் பார்க்கும் போது அச்சம் என்பதற்கு அன்பு காரணமாகத் தோன்றுகிறது உட்கு என்று பொருள் கொள்வதே பொருத்தமானதாகும். நாணம் மடம்

ஆகிய குணங்களும் களவுக் காலத்திற்கு மட்டுமே உரிய குணங்களாகும் என்பர் அவர். காமத் திணையில் கண்ணின்று வருஉம் நாணும் மடனும் பெண்மைய ஆகலின் என்னும் களவியல் நூற்பா உரையில், தலைவியிடத்து நிலைமை பெற்று வருகின்ற நாணமும் மடனும் பெண்ணுக்கு அங்கமாகலின் என்று இளம்பூரணர் விளக்குகின்றார். தலைவியின் வேட்கை, குறிப்பினாலும் இடத்தினாலும் அல்லது கூற்றினால் வெளிப்படாது என்பதற்குக் காரணம் காட்டும் நிலையில் அமைந்ததே இந்நூற்பா: நாணும் மடனுமாகிய இவை பெண்ணுக்குரிய நீங்காப் பண்புகளாதலின் தலைவியின் வேட்கை- கூற்றினால் வெளிப்படும் அளவிற்குத் தலைவி மாட்டு மிக்குத் தோன்றுதல் இல்லை' என்று விளக்குவர் க.வெள்ளைவாரணனார். கற்பு வாழ்க்கையிலும் தலைவி தன் வேட்கையை வெளிப்படக் கூறுகின்ற மரபு இல்லை புது மண் பானையில் வைத்த நீர் போல் புறம் பொசிந்து காட்ட வேண்டும் என்று தொல்காப்பியம் கூறும். விரிவானம் பேசிக்கொண்டே இருக்கும். ஆனால் வெண்ணிலவு பேசாமலே இருக்கும். பேரின்பத்துறையினிலே பெண்ணுக்குப் பேச்சில்லை என்பார்கள் என்று சங்க மரபை அடி ஒற்றிப் பாடுவார் பாரதிதாசன். கோவலன் கூறும் உலவாக் கட்டுரைக்குக் கண்ணகி மறுமொழி எதுவும் கூறவில்லை அல்லவா? களவியல் பத்தொன்பதாம் நூற்பா விளக்கத்தில் 'ஏமற இரண்டும் உளவென மொழிப' என்ற தொடருக்கு அச்சம் வேட்கை காரணமாக நீங்கினும் நாணம் மடம் என்னும் இரண்டும் தலைமகள் பால் எக்காலத்தும் நீங்கா என்று வெள்ளைவாரணனார் விளக்குவது கருதத்தக்கது. 'உயிரும் நாணும் மடனும் என்று இவை செய்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய' என்னும் பொருளியல் நூற்பா நாணும் மடனும் தலைவி தோழி நற்றாய் செவிலி நால்வருக்கும் உரியன என்று கூறுவதையும் கருதுக இந்நூற்பாவை விளக்கும்போது உயிரொத்த அன்பின் ஒருமையும் உயிரினும் சிறந்த நாணமும் மடமும் என்னும் இப்பண்புகள் குற்றமற்ற சிறப்பினை உடைய பெண்பாலார் நால்வர்க்கும் உரியனவாகும் என்று விளக்குவர் வெள்ளைவாரனாரர். நாணும் மடனும் நல்லோர் ஏத்தும்

பேணிய கற்பும் பெருந்துணையாக என்னோடு போந்து' என்னும் கோவலன் கூற்றும் இப்பண்புகள் கற்புக் காலத்திற்கும் உரியவை என்பதைக் காட்டும் சான்றுகளாகும். நாணொடு மிடைந்; கற்பின் வாணுதல் அந்தீம் கிளவிக் குறுமகள் என்னும் கல்லாடனாரின் அகநானூற்றுப் பாலைப் பாடலாலும் கற்புக் காலத்தில் நாணம் உண்டு எனத் தெரியலாம்.

## சாக்காடு என்றால் என்ன?

வேட்கை ஒரு தலை யுள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப

என்னும் களவியல் நூற்பாவில் சுட்டப்பெறும் சாக்காடு என்பதற்குச் சாதல் என்று பொருள் விளக்கம் தருவர் இளம்பூரணர். இந்த விளக்கத்தை அடியொற்றி, களவொழுக்கம் ஒழுகும் தலைவி தற்கொலை செய்து கொண்டு இறத்தலும் உண்டு என்பதை இது காட்டுகிறது. மடல் ஏறுதல், மலைமேல் பாய்ந்து இறத்தல் ஆகியன உரையாசிரியரால் கூறப் பெறுகின்றன என்று விளக்கியுள்ளார் அறவாணன்.

சாக்காடு என்பதற்குச் சாவது போன்ற உணர்வை அடைதல் என்று கொள்வதே பொருத்தமாகும். இதனை, 'உயிர் நீங்கினாற் போன்று உயிர்ப்பு அடங்குதல்' என வெள்ளைவாரணனார் விளக்கியுள்ளார்.

மேற்கூறிய நூற்பா களவொழுக்கத்தில் காதலர் உள்ளத்தே நிகழும் உணர்வு நிலைகளை விரித்துரைக்கின்றது. ஒருவரை ஒருவர் தமக்கு உரியவராகப் பெறுதல் வேண்டும் என்னும் உறுதியான வேட்கையும் உயிர் நீங்கினாற் போன்று உயிர்ப்பு அடங்குதலும் ஆகிய இவை ஒன்பதும் உயிரோரன்ன செய்தீர் நட்பாகிய காம உணர்வின் சிறப்பினைப் புலப்படுத்தும் உணர்வு நிலைகள் ஆதலின் இவற்றைக் களவொழுக்கத்திற்குச் சிறந்தனவாகக் கூறுவர் ஆசிரியர் என்று மேலும் விளக்கியுள்ளார்.

களவொழுக்கத்திற்கு ஏதுவாகத் தலை மக்களிடத்துக் கிளர்ந்து எழும் உணர்வுகள் இவை என்பர் பாலசுந்தரம். சாக்காடு என்பது தலைமகற்கு ஆயின், மடல் ஏறுதல், வரைபாயுதல் முதலியவற்றை எண்ணுதலும் கூறுதலுமாம். தலைமகட்காயின் புலன்கள் மனத்தின் வழி நிகழாமல் கையறவுறுதலும் சாதற்குத் துணிந்தவளாகக் கூறுதலுமாம் என விளக்குவர் அவர். கள ஒழுக்கத்தின்கண் தலைமக்கள் கூற்றுக்கு உரியனவாகப் பின்னர் கூறப்படும் கிளவிகளும் மடல்மாக் கூறல், அழிவுதலை வந்த சிந்தை போல்வன சாக்காடு பற்றியனவாய் அமையும் என எடுத்துக் காட்டுவர் அவர்.

சாக்காடு என்பது இறப்பினைக் குறிக்குமானால் சிறப்புடை மரபினவை என்ற தொடர் பொருளற்றதாகி விடும். எனவே உயிர் நீங்கினாற் போன்று உயிர்ப்பு அடங்குதல் என்ற விளக்கமே நேரியதாகும்.

### முந்நாள் என்பது ஏன்? துணை என்பது யாரை?

முந்நாள் அல்லது துணையின்றி கழியாது
அந்நாள் அகத்தும் அது வரைவின்றே

என்று நூற்பாவை எடுத்துக்காட்டி, பூப்புக்குரிய மூன்று நாட்கள் களவுக் காலத்தில் புணர்ச்சிக்குரிய நாட்களாக முற்காலத்துக் கருதப்பட்டது ஆதல் வேண்டும். பூப்புக்காலப் புணர்ச்சி குழந்தைப் பேற்றிற்கு வழிவகுக்காது என்று பாதுகாப்பு உணர்ச்சி காரணமாக இருந்திருத்தல் வேண்டும் என்று விளக்கி, நச்சினார்க்கினியர், பூப்பெய்திய மூன்று நாளும் அல்லது கூட்டம் இன்றி என்று உரையும், பூப்பு நிகழும் காலத்து வரையாது (நீக்காது) களவொழுக்கம் நிகழ்த்தினர் என்று சிறப்புரையும் எழுதுவர் என எடுத்துக்காட்டியுள்ளார் அறவாணன்.

இந்நூற்பா பாங்கற்கூட்டம் நிகழும் இடம் உணர்த்துதல் நுதலிற்று என்பர் இளம்பூரனர். ஈண்டுத்துணை என்பது பாங்கனாயிற்று. மூன்று நாள் அல்லது துணையின்றிக் களவிற் புணர்ச்சி செல்லாது. அந்நாள் அகத்தும் துணையை நீக்கவும் படாது என்றவாறு. எனவே எதிர்ப்பட்ட தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும் என்றவாறு என்பர் அவர்.

இந்நூற்பாவில் உள்ள துணை என்பதற்குப் பாங்கன் என்று இளம்பூரனர் பொருள் கொள்ள, கூட்டம் என்று நச்சினார்க்கினியார் பொருள் கொண்டுள்ளார். இவ்விருவர் கருத்தையும் பேராசிரியர் வெள்ளைவாரணனார் அவர்கள் பின்வருமாறு மறுத்துள்ளார்.

ஈண்டுத் துணையென்றது பாங்கன் ஆயிற்று என்பர் இளம்பூரணர். எதிர்ப்பட்ட தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும் என்னும் இவ்வுரை பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பாங்கற்கு உணர்த்துயானாயின் அது பாங்கற்கூட்டம் என மூன்று நாள் என்னும் எல்லைக்குள் அன்றிக் களவிற் புணர்ச்சி கூட்டுவிப்போர் துணையின்றி நடவாது என்பது கருத்து. இங்கு முந்நாள் என்பது மூன்று நாள்களாகிய கால எல்லையைகக் குறித்ததே அன்றி, பூப்பின் புறப்பாடாகிய ஈராறு நாள்களில் முதல் மூன்று நாளைக் குறித்தது எனக் கொள்ளுதற்கு இடம் இல்லை. அன்றியும் துணை என்பது துணை ஆவாரைக் குறிப்பதன்றிக் கூட்டம் என்ற பொருளைத் தராது. நூற்பாவில் உள்ள 'அது' எனும் சுட்டு துணை என்னும் பெயரைச் சுட்டுதலே இயல்பாகும் என்று விளக்குவர் அவர்.

இந்நூற்பாவில் திரண்ட பொருளாக, இயற்கைப் புணர்ச்சி இடம் தலைப்பாடு பாங்கற் கூட்டம் என்னும் மூன்று நாள் எல்லை அளவும் தலைவன் தோழியின் துணையின்றித் தலைமகளைக் கண்டு அளவளாவுதல் கூடும் என்பதும், மூன்று நாட்களுக்கு மேல் ஆயின் தோழியின் இசைவின்றித் தலைமகன் தலைமகளை எதிர்ப்படுதல் அரிது என்பதும், மூன்று நாள்களாகிய அவ்வெல்லைக்குள்ளேயே தோழியின் துணையினைப் பெறுதலும் உண்டு என்பதும் இந்நூற்பாவால் புலனாம் என மேலும் விளக்குவார் அவர்.

இங்குத் துணை என்றது தோழியை, இது துணைச்சுட்டுக் கிளவி கிழவியதாகும் என அடுத்து வரும் நூற்பாவால் நன்கு புலனாகிறது. துணை என்பதற்குப் பாங்கன், கூட்டம், தோழி என்ற மூன்று பொருளை முறையே இளம்பூரனர்

நச்சினார்க்கினியர் வெள்ளைவாரணனார் ஆகியோர் கொண்டுள்ளனர். நச்சினார்க்கினியர் கருத்தை ஏற்று விளக்குவர் அறவாணர். தோழி என்று கொள்வதே நேரியது என்பர் பாலசுந்தரம். இந்நூற்பா இடம் தலைப்பாடு பற்றியதொரு மரபு கூறுகின்றது. தலைவியால் களம் சுட்டப்பட்டுக் கூடும் இடம் தலைப்பாட்டுக் கூட்டம் மூன்று நாள் அளவல்லது பாங்கியின் துணையின்றி நிகழாது. அம்மூன்று நாளில் பின்னிரு நாட்களில் பாங்கி துணையாதல் வேண்டின் அத்துணை நீக்கும் நிலைமைத்தன்று. இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தால் நிகழ்வதாயின் அதற்குப் பாங்கர் துணையாதல் இல்லை. மற்றைய மூன்று வகைப் புணர்வின்கண் இடம் தலைப்பாடு தானேயும் பாங்கானாலும் நிகழும். பாங்கன் தலைவி ஆடிடம் அறிந்து வந்து தலைவனைச் செலுத்துதல் அன்றி தான் இடை நின்று கூட்டுதல் இன்மையின் பாங்கன் ஏதுவாகக் கூடுதலும் இடம் தலைப்பாட்டினுள் அடங்கும். எனவே இடை நின்று கூட்டும் பாங்கியே ஈண்டு துணை எனப்பட்டது. இதனைப் பின் வரும் துணைச் சுட்டுக்கிளவி கிழவியதாகும் என்பதனாலும் தெளியலாம்.

ஆக முந்நாள் என்றது இடம் தலைப்பட்டுக் கூடும் மூன்று நாட்களை என்பது போதரும். அவையாவன, இயற்கைப் புணர்ச்சியின் பின் இருவரும், இது நினைவு கொல்லோ கனவு கொல்லோ என்னும் ஐயத்தான் பிற்றை நாளும் நெருநல் நேர்ந்த இடத்திற்குத் தாமே சென்று ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுக் கூடுதலும், கனவன்று எனத் தெரிந்து பின்னர் தலைவியான் களம் சுட்டப்பட்டு மற்றை நாளும் கூடுதலும் அதன் பின்னர் இதனை ஆயத்தார் அறியின் ஏதமாம் என்று அஞ்சி தலைவி அக்களத்திடைச் செல்லாதிருப்பத் தலைவன் தன் பாங்கனால் அவள் ஆடிடம் அறிந்து சென்று குறி செய்து உணர்த்தத் தலைவி ஆயத்தின் நீங்கி வந்து கூடுதலுமாகிய மூன்றுமாம். அந்நாளுள் என்னாது அந்நாள் அகத்தும் என்றதனால் துணை நாடல் ஒரு நாளும் இரு நாளும் என்பதாயிற்று. முதலாவது இடந்தலைப்பாட்டின் பின் தலைவன் தலைவியின் நலம்

பாராட்ட வற்புறுத்தாதவிடத்துத் தெளிவுற்ற தலைவி ஒன்றித் தோன்றும் தோழி துணையாதல் நலம் எனக் கருதி அவள் துணையாகக் குறி வழிச் சென்று கூடுதலும் ஒரோவழி நிகழ்தலின் அந்நாளகத்தும் அது வரைவின்றே என்றார்.

முந்நாள் என்பதற்கு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் எனும் மூன்று நாள் எனப் பொருள் கொண்டுள்ளார் க.வெள்ளைவாரணனார். இடம் தலைப்பட்டுக் கூடும் மூன்று நாட்கள் எனப் பொருள் தந்துள்ளார். சபாலசுந்தரம். பின்னர் உரை நயமுடையதாயினும் வெள்ளைவாரணனார் அவர்கள் கருத்தே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. நச்சினார்க்கினியர் கருதுவது போல பூப்பு நாளைக் குறிக்கிறது என்பதற்கு நூற்பாவில் அகச்சான்று எதுவும் இல்லை. வெள்ளைவாரணம் பாலசுந்தரம் இருவருமே துணை என்பதற்குத் தோழி என்றே பொருள் கொண்டு அக்கருத்தை உறுதிசெய்ய பின் வரும் 'துணைச்சுட்டுக்கிளவி கிழவியதாகும்' என்ற நூற்பாவைச் சான்று தந்துள்ளனர்.

முந்நாள் என்பதற்குப் பூப்புக்காலப் பிரிவு என்பது வெளிப்படை என்கிறார் தி.வே.கோபாலையர். அந்நாளகத்தும் அது வரைவின்றே என்பதனால் பூப்புநாளாகக் கொள்ளுதற்கு இயலாது என இதனை மறுத்துள்ளார் பாலசுந்தரம்.

மேற்காட்டிய உரை விளக்கங்களைக் கூர்ந்து நோக்கும் போது முந்நாள் என்பது இயற்கைப் புணர்ச்சி, இடம் தலைப்பாடு, பாங்கற் கூட்டம் ஆகிய மூன்று நாட்களையும் குறிக்கும் என்பதும், துணை என்பது தோழியைக் குறிக்கும் என்பதும் தெளிவாகின்றன. மேலும் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டியுள்ள 'குக்கூ என்றது கோழி' என்ற குறுந்தொகைப்பாடல் பூப்பிடைப் பிரிவு ஏற்பட்டபோது தலைவி வருந்திக் கூறுவது அப்பாடல் களவுக் காலத்தில் பூப்பிடைப் புணர்ச்சி உண்டு என்னும் கட்டுரையாளர் கருத்திற்கு

எப்படிச் சான்றாகும்? பூப்புக் காலத்தில் ஷர்மிஸ்டா என்ற பெண் யயாதியை அழைத்தாள். உத்தங்கன் என்பவவன் குருவின் மனைவியுடன் மாதவிலக்குச் சமயங்களில் உறவு கொண்டான் என்னும் வடவர் வாழ்க்கைப் பற்றிய மேற்கோள் செய்திகள் தூய தமிழ்க் காதலோடு பொருந்துமாறு எங்ஙனம்?

***முடிவுரை***

மேற்கூறிய விளக்கங்களால் சங்கச் சமுதாயத்தில் அக வாழ்க்கையில் பெண்கள் முதன்மைப்படுத்தப் பட்டிருந்தாலும் குடும்பத் தலைமை ஆடவர்க்கே வழங்கப்பட்டிருந்தது என்பதும் நாணம், மடம் ஆகியவை களவுக் காலத்தில் மட்டுமின்றிக் கற்புக்காலத்திலும் பெண்களுக்கு உரிய பண்புகளாகும் என்பதும், சாக்காடு என்பதற்கு உயிர் நீங்கினாற் போன்று உயிர்ப்பு அடங்குதல் என்பதே பொருத்தமான பொருள் என்பதும் முந்நாள் என்பது இயற்கைப் புணர்ச்சி இடம் தலைப்பாடு பாங்கற் கூட்டம் ஆகிய மூன்று நாட்களையும் குறிக்கிறது என்பதும், துணை என்பது தோழியைச் சுட்டுகிறது என்பதும், பூப்பிடைப் புணர்ச்சித் தற்காப்புக்காக மேற்கொள்ளப்பட்டது என்னும் கருத்து தமிழர் நாகரிகத்துக்கும் பண்பாட்டிற்கும் சிறிதும் ஒவ்வாதது என்பதும் பெறப்படுகின்றன.

ஒரு சிறந்த பாடப்புத்தகமே
உயர்ந்த ஆசிரியர். - ***காந்தியடிகள்***

கேள்வி முயல் - ***ஔவையார்***

# ஒரு வீட்டின் கதை புதினத்தில் சமூகமாற்றம்

- பேரறிஞர். ம. திருமலை

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய புனைகதை என்னும் இலக்கியவகை பிற இலக்கிய வகைகளைவிடச் செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம் அதன் சமூகவியற் பண்பே ஆகும். மனித சக்தியின் மேன்மை உணரப்பட்டு வரும்இக்காலகட்டத்தில் புனைகதைகள் சமூகத்தில் மனிதனின் இன்னல்கள், சமூகமாற்றங்கள் ஆகியவற்றைச் சித்திரிக்கின்றன.

கலை, இலக்கியம் ஆகியவற்றின் நோக்கம் மனித இனத்தின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதாக இருக்க வேண்டும். "என்னைப் பொறுத்தவரையில் மனிதன்தான், மனிதன் ஒருவன்தான் எல்லாப் பொருட்களையும், எல்லாக் கருத்துக்களையும் படைப்பவன். . . புனிதமானது எது என்று சொல்லித்தான் தீரவேண்டுமென்றால் மனிதன் தன்னைப் பற்றித்தானே அதிருப்தி கொள்கிறானே இன்றிருப்பதைவிட இன்னும் மேலானவனாக இருக்க முயற்சிக்கிறானே அதுதான், அது ஒன்றேதான் எனக்குப் புனிதமானது என்று செல்வேன்" என்பார் மாக்சிம் கார்க்கி. இந்றைய சமூக அமைப்பில் கலைஞர்களின் பணி மனித இனத்தின் மேம்பாட்டுக்குப் பாடுபட வேண்டியதாகும் என்பதை இக்கூற்று உணர்த்துகின்றது.

மனிதனுக்கு அவன் மேம்பாட்டினை உணர்த்துவதற்கு அவனது கடந்த காலத்தை விமரிசிப்பது இன்றியமையாததாகும். நிலவுடைமை வாழ்க்கை முறையின் சிதைவுகளை உணர்த்துவதன் மூலம் இன்றைய சந்தைச் சமூக அமைப்பில் வாழ்கின்ற மனிதனை நேர் பாதையை நோக்கித்திருப்பிவிட இயலும். மாறிவருகின்ற புதிய சூழ்நிலைஎில் பழமையான மனிதனின் சிதைவுகளைக் காட்டுவதென்பது ஒருவகையில் நடப்பியல் இலக்கியநெறி சார்ந்ததெனினும் அதனுடன் அது நின்றுவிடுவதில்லை; அதற்கும் அப்பாற்பட்டு தன்னிலையுணர்வு

கொள்ளும்படியாகவும் அது மனிதனைத் தூண்டுகிறது; ஒருவகையில் கூறினால் மனிதனுக்கு அவனைப் பற்றிய செய்திகளை அஃது அறிவுறுத்துகிறது. அவ்வகையில் வல்லிக்கண்ணன் எழுதிய 'ஒரு வீட்டின் கதை' என்ற புதினத்தில் சமூகமாற்றம் என்ற கூறு இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

'ஒரு வீட்டின் கதை', "தமிழகத்தின் உட்புற வாழ்க்கையின் ஒரு நூற்றாண்டு வரலாற்றைச் சுவைபடச் சொல்லி,சமூக, குடும்ப, தனிமனித உறவுகளைப் பின்னிச் செல்கிறது". ஒரு நிலபிரபுத்துவக் குடும்பத்தின் சிதைவு இந்நாவலில் கதைக்கருவாக அமைந்திருக்கின்றது. மகிழ்வண்ணபுரத்து ஒத்தைவீட்டின் பின்னணியில் இந்நாவலின் கரு விரிவடைகின்றது. பிறவிப் பெருமாள்பிள்ளை தனது செல்வாக்கினாலும், பண்புகளினாலும் ஊரையே ஆட்டிவைக்கும் திறன் பெற்றவராக விளங்குகிறார். ஊர்ப்பொது மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாதவராகவும் குற்றம் செய்தவர்களுக்குக் கேள்விமுறையின்றிக் கடுந்தண்டனை வழங்குபவராகவும் பிறவிப்பெருமான்பிள்ளை இந்நாவலில் படைக்கப்பட்டிருக்கின்றார். "வாயடியும் கையடியும் பெற்ற தனிநபர்கள் - நெஞ்சு தைரியமும், பண பலமும் உடைய அடாவடிக்காரர்கள் தங்கள் சித்தம் போல் ஊரை அடக்கி ஒடுக்கும் ஆற்றல் பெற்றிருந்த காலம் அது. அத்தகைய தனிநபர் ஒருவர்முன்னே ஊரார்கள் மனித மந்தையாகச் செயலிழந்து நிற்கக்கூடிய காலமாகவும் அது இருந்தது" என்று அக்காலகட்டச் சமுதாய நிலையைப் பற்றி நாவலாசிரியர் குறிப்பிடுகிறார்.

பிறவிப்பெருமாள்பிள்ளையின் மகள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி கணவனைவிட்டு வேறொருவனுடன் ஓடிப்போனது முதல் தன்மான உணர்வினால் மனம்குன்றி பிறவிப்பெருமாள்பிள்ளை இறக்கிறார்.

பிறவிப்பெருமாள்பிள்ளையின் காலத்திற்குப் பின்னர், 'ஒத்தைவீடு' பெண்கள் ராஜ்யமாகத் திகழ்கின்றது.

பிறவிப்பெருமாள்பிள்ளையின் மனைவி தையல்நாயகியின் காலத்தில், ஓடிப்போன மகள் திரும்பவும் ஒத்தைவீட்டுக்கு வந்து மீண்டும் வேறொருவனுடன் ஓடிப்போகிறாள்.

தையல்நாயகியின் மூத்தமகன் வெயிலுகந்தநாதன் பள்ளிக்கல்வி பெறுவதற்காகப் பக்கத்து நகரத்திற்குச் சென்று வருகிறான். நகர்ப்புறத்து நாகரிகச்சாயை சிறிதும் படியாமல் இருந்த ஒத்தைவீட்டில் மெல்ல மெல்ல நகர்ப்புற நாகரிகம் புகுகின்றது. வீட்டை அழகுபடுத்துதல், ஆடம்பரமான உடையலங்காரங்கள், வாகனவசதிகள் ஆகியவற்றை வெயிலுகந்தநாதன் ஏற்படுத்திக் கொள்கிறான். "மெதுவாகவும் வேகமாகவும் நாட்டிலே பரவிவந்த பல்வேறு மாற்றங்களும் வெயிலுகந்தநாதனிடமும் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன" என்று இதனை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

முதன்முறையாக மகிழ்வண்ணபுரத்துக்கு வந்த நாடகக் குழுவினருடன் வெயிலுகந்தநாதனுக்குத் தொடர்பு ஏற்பட்டு, நாடக நடிகை கிருஷ்ணவேணியுடன் வாழ்க்கை நடத்துமளவிற்கு அத்தொடர்பு நீள்கிறது. இதனால் வெயிலுகந்தநாதனின் மனைவி காந்திமதி இறக்கிறாள்; கிருஷ்ணவேணி வெயிலுகந்தநாதனைப் பிரிகிறாள்; மனமுறிவடைந்த வெயிலுகந்தநாதன் குடிகாரனாகி இறக்கிறான். 'ஒத்தைவீடு' உறவினர்களிடையே சர்ச்சயை ஏற்படுத்துகின்றது. பலருடைய கைகளில் அது மாறிமாறி இறுதியில் அரசுக்குச் சொந்தமாகி மருத்துவநிலையமாக மாறுகின்றது.

நாயக்க மன்னர்கள் காலச்சூழலில் தொடங்கி, சுதந்திரத்திற்குப் பிந்திய காலகட்டத்தில் இன்றுவரை தமிழகத்தின் கிராமச்சமூகம் ஒன்றின் கதையைக் காலஓட்டத்தில் அதில் சேர்ந்த மாற்றங்களை ஒரு வீட்டின் பின்னணியில் அமைத்துக் கூறுகிறார் வல்லிக்கண்ணன். நிலப்பிரபுவான பிறவிப்பெருமாள் பிள்ளையின் காலந்தொட்டு, நாட்டில் நிலவிய மாற்றங்கள் 'ஒத்தைவீட்டின் பின்னணியில் இந்நாவலில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அறியாமையில் உழன்றபோதும் எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்த தமிழகக்கிராமம் ஒன்றின் உட்புறவாழ்க்கை, காலமாற்றங்களின் விளைவினால் பாதிக்கப்படுவது இந்நாவலில் சித்திரிக்கப்படுகின்றது.

ஆங்கிலக்கல்விமுறை, ஆங்கில நாகரிகத்தின் தாக்கம், ஆங்கிலேயர் வருகையினால் தோன்றிய புதிய, முதலாளித்துவ வாழ்க்கை முறையின் கூறுகள் ஆகியவை தமிழகக் கிராமிய வாழ்வைப் பாதித்தன. நகரங்கள் தொழில் மயமாகவும் வணிகமயமாகவும் மாறின. புதிய பொருளாதார அமைப்பு உருவான சூழ்நிலையில் கிராமியப் பொருளாதாரத்தின் நிலைப்புத் தன்மை உடையத் தொடங்கியது. கிராமமக்கள் குறிப்பாகச் சிறுவிவசாயிகள் விவசாயக் கூலித் தொழிலாள்களர்கள் வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தக் காலத்தில்தான் கிராமிய சமூகத்தின் மக்கள் நகரங்களை நோக்கி பெருமளவில் இடம்பெயர்ந்தனர் என்று கிரிராய் குப்தா முதலான பல சமூகவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சமூகத்தில் காணப்பட்ட இந்த இன்றியமையாத போக்கினைத் தமிழ் நாவலாசிரியர்கள் பலரும் சித்திரித்துள்ளனர். நகர்ப்புறத்தை நாடி கிராமமக்கள் செல்கின்ற சமூக மாற்றத்தை வல்லிக்கணன்னன் நடப்பியல் பாங்குடன் இந்நாவலில் சித்திரித்திருக்கிறார்.

விடுதலைக்கு முந்திய காலகட்டத் தமிழகக் கிராம சமூகத்தின் பண்பாடுகளைச் சித்திரிப்பதிலும், விடுதலைககுப் பிந்திய காலகட்டத்தில் நேர்ந்த சமூக மாற்றங்களையும் சித்திரிப்பதில் நடப்பியல் பாங்கு சிறப்பிடம் பெறுகின்றது. "படிக்க வேண்டியதில்லை. இன்னொருத்தன் கிட்டே கைகட்டிச் சேவுகம் பண்ண வேண்டியதில்லை என்று அந்தக் காலத்தில் நிலவிய மத்தியதர மேல் மத்தியதரப் பிள்ளைமார் குடும்ப மனோபாவம் கால ஓட்டத்தில் கரைந்து போயிருந்தது. எங்காவது, ஏதாவது வேலை பார்த்துத்தான் பிழைக்கவேண்டும் என்ற அவசியம் சிறிது சிறிதாகச் சிலரை அவ்வப்போது வெளியேறச் செய்திருந்தது; நகரங்களுக்குப் போய் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று சில குடும்பங்களைக் குடிபெயர வைத்திருந்தது என்று விடுதலைக்குப் பிந்திய சமூகத்தில் நிலவிய மாற்றங்களைச் சித்திரிக்கிறார் வல்லிக்கண்ணன்.

இப்புதினத்தின் சிறப்பான வேறொரு கூறு இதில் ஊடாடிக் கிடக்கின்ற அங்கதச்சுவையாகும். பிறவிப் பெருமாள்பிள்ளையின் அடாவடித்தனங்களைப் பற்றியும்,

வெயிலுகந்தநாதனின் ஆடம்பரக் கிறுக்கதையும் விமரிசிக்கின்ற இடங்களிலெல்லாம் அங்கதச் சுவையை ஆசிரியர் விளைவிக்கிறார். இக்காலத்தில் பல்கலைக்கழகங்களிலும் அரசு நிறுவனங்களிலும் செய்யப்படுகின்ற, பயனற்ற, மக்களின் வாழ்க்கையுடன் எந்தத்தொடர்பும் இல்லாத, ஆராய்ச்சிகளைப் பற்றிய ஏளனமும் இந்நாவலில் இடம்பெறுகின்றது. சான்று வருமாறு "காட்டுமிராண்டிகளின் பாஷை" முதல் பண்பாடு பெற்ற மக்களின் வாழ்க்கையில் பகிரங்கமாகவும் மறைவாகவும் உலவுகிற 'கெட்ட வார்த்தைகள்' ஈறாக அனைத்து விஷயங்களையும் 'இன்ட்டெலக்சுவல்ஸ்' ஆய்வு செய்து பக்கம் பக்கமாக 'தீஸிஸ்' எழுதித்தள்ளுகிறார்கள். இவற்றால் எல்லாம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏதாவது பயன்உண்டா என்பதை எந்த அறிவு ஜீவி' தனது ஆய்வுக்குரிய விஷயமாக எடுத்துக்கொள்ளவில்லை"?.7

கட்டமைப்பு அடிப்படையில் சிக்கல் ஏதுமில்லாத கதைப்பின்னல் இந்நாவலில் அமைந்திருக்கின்றது. 'ஒத்தைவீடு' புதுப்பிக்கப்படும் நிகழ்ச்சி வருணனையில் தொடங்கி, வீட்டின் முன்கதையும், அதில் வாழ்ந்தவர்களின் கதையும் அதைச்சார்ந்திருதவர்களின் கதையும் கூறப்படுகின்றன. புதினத்தின் முடிப்புப் பகுதியில் வீடு புதுப்பிக்கப்படுவதற்கான காரணமும் கூறப்படுகின்றது. கதைப்பின்னலின் முடிப்புப்பகுதியில் ஒரு 'அவசரகதி' நேர்ந்துவிட்டதைப் போன்ற அனுபவம் இந்நாவலைப் படிக்கும்போது ஏற்படுகிறது. கதைக்கருவாலும் கதைக்கருவை விவரித்துச் செல்வதில் காணப்படுகின்ற இயல்புப் போக்கினாலும், அங்கதச் சுவையினாலும் சிறப்புடையதாக இப்புதினம் திகழ்கின்றது.

## குறிப்புகள்

1. மாக்சியம் கார்க்கி, நான் எவ்வாறு எழுதக் கற்றுக் கொண்டேன். பக். 51-52.
2. வல்லிக்கண்ணன், ஒரு வீட்டின் கதை, ப. 79.
3. மேலது
4. மேலது
5. . Giri Raj Gupta, Family and Social Change in Modem India, P.91.
6. வல்லிக்கண்ணன், ஒரு வீட்டின் கதை, ப. 73.
7. மேலது., பக். 74-75.

# வள்வல் பாண்டித்துரைத்தேவர் வாழ்த்து

- பண்டித ரெ. இராமமூர்த்தி

1. தாய்மொழியாகும் தமிழ்நெறி யென்றதைத் தாங்கவந்த
சேய்; திருப் பாண்டித் துரைத்தேவன் கூடலில் செந்தமிழ்க்கு
வாய்நறும் சங்கம் அமைத்துக் கைவண்ணம் வழங்கிநின்று
பாய்புகழ் எய்திநின்றான் தமிழெங்கும் பரவியதே

2 காண்டற் கினிய கருணைத் திருவுளங்கொள்
பாண்டித் துரை வளர்த்த பைந்தமிழே! - ஈண்டுனையான்
போற்றுவேன்; அன்னோன் புகழ் பரப்பி நீயுமிவண்
ஏற்றம் உறவாழ்க என்று

3. உண்டி கொடுத்தான், உடைகொடுத்தான்; கற்பவர்க்கு
வண்டமிழ் கற்பிக்கும் வகையுணர்ந்த - பண்டிதரைப்
போற்றினான்; பாண்டித் துரையாம் புரவலன்சீர்
ஆற்றலான் சங்கம் அமைத்து

4. மதுரைத் தமிழ்ச் சங்க மாதை மணந்து
துதிபெறு பண்டிதர் தோன்ற - அதுகண்டு
பாண்டித் துரைத் தேவன் பற்றுமகிழ்ச் சிக்கெல்லை
ஈண்டுரைத்தற் கில்லை இனி.

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே
- *நக்கீரர்*

# சிந்தனைக்குச் சில குறட்பாக்கள்

- நாபா

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

"இவைதகாது என்று அஞ்சாது நெஞ்சில் துணிவு கொண்டு பிறர் சோகிக்கத் தருவனவாகிய தூயது அல்லாத கருமங்களைச் செய்யாது ஒழிக" இங்ஙனம் இதனைக் குறிக்கொண்டு செய்வான் ஆயினும், செய்யும் கருமம் செய்யுமிடத்தும் பிறர்க்கு இரக்கம் வருதல் செய்யாமையே நன்று என்றவாறு". அஃதாவது, ஒருவன் பின் இருந்து வருந்தத்தக்க செயல்களைச் செய்தல் கூடாது. ஒருவேளை அவ்வாறு செய்யும் சூழ்நிலை ஏற்படுமிடத்தும் பிறர் வருந்தாவண்ணம் அவற்றைச் செய்க என்பதாம். காளிங்கர் கருத்தும், நன்கு சிந்திப்பின், இக்குறட்பாவின் நேரிய பொருளுக்கும் பொருந்துமாறு இல்லை என்பது புலனாகும்.

இதுகாறும் கூறியவற்றால், பரிமேலழகர் உரை சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருப்பினும் திருவள்ளுவர்தம் கருத்துக்கு அரண் செய்வதாகத் தோன்றவில்லை. செய்யக்கூடாத ஒரு செயலைச் செய்து முடித்தபின்னர், அதற்காக வருந்திக் கொண்டிருப்பதில் யாது பயன் என்று வினவி, அதற்குப் பலவாறு தருக்க முறையிலான விளக்கங்கள் கூறி, பின்னிருந்து வருந்தவேண்டா என்று முடிக்கிறார் பரிமேலழகர். இவ்வாறு பொருள் கொள்ள இக்குறட்பா இடந்தரவில்லை என்பது கவனிக்கத்தகும். எனவே அன்ன என்ற சொல்லுக்கு அத்தகைய செயல்கள் என்று கொள்ளவேண்டுமேயன்றி "இரங்கல்கள்" என்று பொருள் கொள்ள இயலாது.

பெருமை என்னும் அதிகாரத்துள் வரும் குறள் ஒன்று அடுத்து ஆய்வுப் பொருளாகிறது அக்குறள்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பதாம். இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு:

"எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல் ஒக்குமே எனினும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா, அவை செய்யும் தொழில்களது வேறுபாட்டான் என்றவாறு" அவர் மேலும் விளக்கம் தரும்வகையால், "வினை வயத்தான் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன்பயன் அனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் .பிறப்பொக்கும். என்றும், பெருமை சிறுமைகட்கும் கட்டளைக்கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின் சிறப்பு 'ஒவ்வா'. என்றும் கூறினார்" என்பர்.

இனி மணக்குடவரும் பரிப்பெருமாளும், "எல்லா உயிக்கும் பிறப்பால் ஒரு வேறுபாடில்லை, ஆயினும் தான் செய்தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே பெருமை ஒவ்வாது என்றவாறு" என்பர். பரிதியார், "மனிதர் எல்லோரும் சனனத்தால் ஒப்பர்; ஆசாரத்தினாலே நற்குலத்தாரவர் என்றவாறு. நற்குலத்தர் ஆவர் என்றதால் இழி தொழிலாலே இழி குலமாவர் என்பதாம்" என்று உரைகண்டனர். காளிங்கர் என்பர், "மக்களாகிய அனைவர்க்கும் பிறப்பின்கண் ஒரு வேற்றுமை இல்லை; அம்மக்கட்குச் சிறப்பு ஒவ்வாது என்பது என்னையோ எனில், இயல்பு நீக்கிய இழிவு தொழில் ஒருவர்க்கு உளதாயின் இவர் சாலச்சிறியர் என்றும், தமக்கு இயல்பாகிய பேரொழுக்கத்தின்கண் பிழையாது ஒழுகின் இவர் சாலப் பெரியார் என்றும் இங்ஙனம் வழங்கிவருதலால் யாவர்க்கும் சிறப்பு ஒவ்வாது என்பது தெரிந்துகொள்ளப்படும் என்றவாறு" என்று உரையெழுதிப் போந்தார். இவரது உரையால் ஒருவரது சிறப்பு அல்லது சிறப்பின்மை அவரது ஒழுக்குமுடைமை அல்லது அஃதின்மை என்பதனைப் பொறுத்தது என்பது தெளிவாம். ஆயின் இங்குக்காட்டிய குறட்பாவோ ஒழுக்கத்தைப் பற்றியது அன்று; அவரவர் மேற்கொள்ளும் தொழில் அல்லது காரியம் பற்றியதாம். எனவே காளிங்கர் உரை ஈண்டுப் பொருந்துமாறில்லை என்பது புலனாம். பரிதியாரும் ஆசாரமே காரணம் என்று கூறுகின்றாராதலால் அவருரையும் பொருந்துமாறில்லை.

இனிப் பரிமேலழகரும் மணக்குடவருமே தொழில் பாகுபாட்டால் சிறப்பு ஒவ்வாது என்று உரைத்துள்ளனர். இவர்தம் கருத்து வள்ளுவரின் உண்மையான உள்ளக் கிடக்கையை உணர்த்துமாறில்லை. திருவள்ளுவர் தமது நூலில் எத்தொழிலையும் இகழ்ந்தாரல்லர். கிரேக்கநாட்டு அரித்தாட்டிலால் இழிவாகக் கருதப்பட்ட வேளாண்மையையே வித்ந்து ஓதுவராயினர் திருவள்ளுவர். அங்ஙனமாகவும் ஒருவன் செய்யும் தொழில் வேறுபாட்டால் அவனது சிறப்பு கணிக்கப்படும் என்பது பொருந்தாவுரையாகும்.

பரிமேலழகரும் மணக்குடவரும் .செய்தொழில். என்ற தொடரை வினைத்தொகையாகக் கொண்டு உரை செய்துள்ளனராதலால் இப்பொருந்த மின்மை தோன்றலாயிற்று. 'செய்தொழில்' என்ற தொடரை வினைத்தொகையாகக் கொள்ளாமல் 'தொழில் செய்' என்று முன்பின்னாக மாற்றித் தொழிலைச் செய்யும் முறைவேறுபாட்டால் சிறப்பு அனைவர்க்கும் ஒத்தலில்லை எனப் பொருள்வதே நேரிதாகும். இவ்வாறு கொள்ளும் போது 'செய்' என்பதனை முதல்நிலைத் தொழிற்பெயராகக் கருதவேண்டும். 'செய்தல்' என்பது 'செய்' என்று ஈறு கெட்டு முதல்நிலையாயிற்று. 'அறிகொன்று' என்ற இடத்து 'அறிவு' என்பது வுகர ஈருகெட்டு 'அறி' என்று நின்று தொழிற்பெயராயினமை காண்க. (குறள் 638) ஈண்டுப் பரிமேலழகர் 'அறி' என்பது முதல் நிலைத்தொழிற்பெயர் என்று குறித்துள்ளமை காணலாம்.

இன்றியும் பரிமேலழகர் பிரிதொரு குறளுக்கு உரை கண்டபோது கையாண்ட இலக்கண உத்தியினை ஈண்டுக் கையாண்டிருப்பரேல் இக்குறளுக்கு நேரான உரை கண்டிருக்க முடியும்.

"ஓ ஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்" (குறள் 656)

இக்குறட்பா வினைத்தூய்மை என்னும் அதிகாரத்தில் வருவது. இதற்கும் பரிமேலழகர் மிகவும் கவனமாகச் 'செய்வினை' என்ற தொடருக்குப் பொருள்கொண்டுள்ளார். உரை முழுவதும் வருமாறு:

"மேலாகக் கடவோம் என்று கருதுவார் தம் ஒளி கெடுத்தற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க என்றவாறு"

இதனை மேலும் விளக்கு முகத்தான், 'செய்' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது என்றும், 'அன்றிச் செய்வினை' என வினைத்தொகை ஆக்கியவழிப் பொருளின்மை அறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்று என்பதாம். என்றும் கூறியுள்ளார். ஈண்டுச் 'செய்வினை' என்றும் வினைத்தொகைநிலைத் தொடரை 'வினைசெய்' என்று முன்பின் தொக்கதாகக் கொண்டும் உரைகண்ட பரிமேலழகர், 'செய்தொழில்' என்ற வினைத்தொகையை 'தொழில்செய்' என்று மாற்றிச் 'செய்' என்பதனை முதனிலைத் தொழிற்பெயராகக் கொள்ளாமல் உரைகண்டதரல்தான் உரைப்பொருத்தமின்மை ஏற்பட்டது என்பது சிந்திக்கத்தகும்.

இது காறும் கூறியவற்றால் 'பிறப்பொக்கும்' எனத் தொடங்கும் குறளுக்குக் கீழ்வருமாறு உரை காண்டலே வள்ளுவர் உள்ளத்திற்கு ஏற்புடையதாக இருக்கும் என்று கருதலாம்.

"எல்லா மக்களுக்கும்(பொதுவாகிய) பிறப்பியல்பு ஒக்கும் எனினும், (பெருமை சிறுமை எனப்பட்ட) சிறப்பியல்புகள் அவை, மேற்கொள்ளும் தொழில்களைச் செய்து முடிக்கும் திறமைவேறு படுதலால் ஒவ்வா"

இவ்வுரையால் ஒருவன் அல்லது ஒருத்தி வாழ்க்கைக்கு எத்தொழிலை மேற்கொண்டாலும் அதனை முட்டின்றிச் சிறப்பாக முடிக்கும் ஆற்றல் வேறுபாட்டால் சிறப்பும் வேறுபடும் என்பதும், தொழில்களுக்கிடையே சிறப்புடைத்தொழில் சிறப்பில் தொழில் எனத் தொழில்வேறுபாடுகள் இல்லை என்பதும் பெறப்படும். 'சந்து தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்' எனப் பாரதியார் பாடியதும் நோக்கத்தக்கதாகும்.

(தொடரும்)

# திருவிரையாக்கலி

**- பேரறிஞர் அ.மா.பரிமளம்**

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

இத்தொடர்களைக் கூர்ந்து நோக்குங்கால், திருவிரையாக்கலி என்னும் தொடருக்கு அறிஞர்கள் அளித்த விளக்கங்கள், அகராதிப் பொருள் ஆகியவற்றினும் மேலாகப் பொருட்டெளிவு ஏற்படக் காணலாம். திருவிரையாக்கலி பிழைத்தவர்க்கு எத்தகைய தண்டனை வழங்கப்படும் என்பதும், அவர்கள் எவ்வகைத் துன்பமுறுவர் என்பதும் இவற்றில் விளங்காவிடினும், தண்டிப்பவர்யாவர் என்பது நன்கு புலனாகின்றது. ஸ்ரீயாக்ஞை என்பதும், திருவாணையென்பதும் ஒன்றாகும். அதனை மறுத்தவர்களைத் தண்டிக்கும் உரிமை நகரத்தார்க்குரியது. திருவிரையாக் கலியாணை மறுத்தாரைத் தண்டிக்கும் உரிமை தேவரடியாராகவுள்ள ஆண்டார்களுடையது ஆகும்.

திருமணி குழிக் கட்வெட்டிலுள்ள "விரோதம் செய்தாரை ஸ்ரீ யாக்ஞை திருவாணை மறுத்தாரைச் செய்வவது செய்து, இத்தன்மத்துக்கு விரோதம் வராமல் காத்து" என்றும், "திருவிரையாக்கலி மறுத்தாரைத் தேவரடியாராள்ள ஆண்டார்களே தண்டித்து" என்னும் உள்ள தொடர்கள், இருவகையார் (நகரத்தார் - தேவரடியார்கள்) தண்டிக்கும் உரிமை பெற்றிருந்தனை உணர்த்துவனவாக உள்ளன. "திருவிரையாக்கலி" என்னும் உரிமையைத் தேவரடியாராக விளங்கிய தாமே. மேற்கொண்டு கோட்புலி நாயனூர் செயற்பட்டார். ஆணையைப் பிழைத்த மக்களை ஒறுக்கும் செயலைப் பிறர் மேற்கொண்டிருந்தால், அவர்கள் கோட்புலி பால் கொண்டுள்ள மதிப்பாலும் அன்பாலும் தண்டனையைச் சரிவர நிறைவேற்றாநிலை தோன்றிமித்தல் கூடும். தம் செயலால் கோட்புலியார் அக்குறைபாடு தோன்றாவாறு தடுத்துச்

'செயற்கரிய செய்த' பெரியராயினார். அந்த வீரமே அவரைத் திருத்தொண்டருள் ஒருவராக்கிச் சுந்தரரைப் பாடச் செய்தது. மேலும், கோட்புலியின் செயலால், திருவிரையாக்கலி பிழைத்தார்க்கு வழங்கப்படும் தண்டனையின் உச்ச எல்லை உயிர் ஒறுப்பு என்பதும் புலனாயது. இந்த உண்மையினையே சேக்கிழார், கோட்புலி நாயனார் வரலாற்றால் உணர்த்தியுள்ளார்.

திருவிரையாக்கலி என்னும் தொடரில் சைவம், வைணவம் அல்லது பிற சமயச் சார்பு பற்றிய எக்குறிப்பும் காணுமாறில்லை, ஆனால், இத்தொடரை ஆண்டுள்ள நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், பட்டினத்தடிகள், கச்சியப்ப முனிவர் ஆகியோர் சைவ சமயத் தவராக உள்ளமையாலும் இத்தொடர் இடம் பெற்றுள்ள கல்வெட்டுக்கள் சிவாலய அறக்கொடைக் காப்பு வாசகம் கொண்டனவாக அமைவதாலும், இதற்குச் சிவனது ஆணை, சிவபெருமானை முன்னிட்டுக் கூறும் ஆணை என்று விளக்கம் தந்துள்ளனர்.

தணிகைப் புராணத்தின், பிரமன் சிருட்டி பெறு படலத்துள் இடம்பெறும் பின்வரும் பாடல் 'விரையாக்கலி' சிவனது ஆணை என்றும் அதனை இறைவன் யாண்டும் பரவச் செய்து நிறைவேற்றுவான் என்றும் குறிப்பிடக் காணலாம். அதுவருமாறு

"முத்திப் பதம் ஒருமூன்றொரு முழுவதும் கழுதிரதம்
செத்துப் பணி யடியார் சிரம் சேர்த்தின் பருள் பாதத்து
எத்திக்கினும் விரையாக்கலி இவர்வித்து அமர் இயமன்
மைத்துத் திணி உடல்லொன்றிய வரதா அடிபோற்றி"

'திருவரையாக்கலி' என்று கூறப்படுவதன் சிறப்பினை உணர்ந்து அறக்கப்பாலண கூறியதனையும், அதனை ஏற்று மக்கள் செயல்பட்டதனையும் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் உணர்த்துகின்றன. அந்த ஆணையை இகழ்ந்தமையால் வினையும் தீங்கினைக் கோட்புலி நாயனார் வரலாறு உணர்த்துகின்றது. இதனைப் போன்றே இறைவனான

சிவபெருமானை முன்னிட்டுக் கூறும் ஆணையைத் தவறாது நிறைவேற்றியதனால் நிறைவேற்றியவர் எய்திய நற்பெற்றினையும் பெரிய புராணம் காட்டியுள்ளது.

பொய்கடிந்து அறத்தின் வாழ்ந்து, சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சார்ந்து வாழ்ந்த திருநீலகண்டத்துக் குயவனூர், இளமை மீதூர இன்பத்துறையில் எளியரானார். அதனால் துனியும் முனிவுமெய்திய அவர் மனைவியார் "தீண்டு வீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார். அதனைக் கேட்டவர் 'எம்மை என்றதனால், மற்றை மாதரார் தமையும் தீண்டேன்' என மொழிந்து முதுமை காறும் அதனைக் காத்து நின்றுள்ளார். 'அன்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை' வாழ்ந்து ஆணை காத்ததன் பயனாக "வென்ற ஐம்புலனால் மிக்கீர் விருப்புடன் இருக்க நம்பால் என்றும் இவ்விளமை நீங்காது" என்று இறைவனால் அருள் செய்து ஆட்கொள்ளப் பெற்றார்.

சில காலமே நிற்கும் வற்கடத்தினை ஆற்றாமல் ஆணையினைப் பிழைத்தமையால் தண்டனை எய்தியதனையும், பல காலம் காம உணர்வு துறந்து ஆணை காத்தமையால் பேரின்ப மெய்தியதனையும் பெரியபுராணம் காட்டுகின்றது.

'விரையாக்கலி' என்பது போற்றினாரைக் காக்கவும், இகழ்ந்தாரை அழிக்கவும் செய்யத்தக்க இறையாணையாக அமைந்தமையால் அதன் மாட்சியுணர்ந்த தமிழ் மக்கள் அப்பெயரைத் தாம் வாழும் தெருவுக்கும் சூட்டிப் போற்றியுள்ளனர். இதனைத் திருப்புறம்பியத் திருக்கோயிற் கல்வெட்டொன்றில் "— இத்தோவர் (தே)தவதானம் பிரம்பில் விரை(யா)க்கலிப் பெருந்த(ெ)தருவிற் சக்கரப் பாடியோம் தேவகன்மிகள் வசங்கொண்ட காசைம்பது—" என்று இடம் பெற்றுள்ள பகுதியால் அறியலாம். 'விரையாக்கலி' போலும் அறக்காப்பு ஆணைவாசகங்கள், திருகோயிற் சிலைகளையே களவாடும் இக்காலத்தில் 'ஏட்டுச் சுரைக்காய்' போலக் காட்சி வாசகங்களானது காலத்தின் கோலமேயாகும்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில்
அறிமுகப்படுத்தும்

# மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள
அரிய வாய்ப்பு

## திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்த பரிசோதனை
   * இரத்த வகை
   * சர்க்கரை அளவு
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.
   * சீரம் கிரியேட்டினைகள்
   * கொலஸ்ட்ரால் அளவு

## கூடுதல் பலன்கள்

* இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
* இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு பார்த்தல்
* இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்கள் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

# இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு: பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50 செலுத்த வேண்டும்.

தொடர்புக்கு

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

Only private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O. Ms. No. 4901/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.
Ph : 536361 (8 Lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்


அன்பு அச்சகம், மதுரை - 1.